FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORMS

C 8120377

1 District : Ft.George — FIR No. 68/AC/2025 Date: 16.10.2025
Year: 2025

2 (i) Act : P.C.Act 1988 as amended in 2018 — Sections: 8, and
(ii) Act : — Sections: 7(a)
(iii) Act : — Sections:
(iv) Other Acts & Sections : —

3 (a) Occurrence of Offence Day : — Date from : 15.10.2025 — Date to : 15.10.2025
Time Period : — Time from : 16.20 hrs — Time to : 22.00 hrs

(b) Information Received at PS. Date : 16.10.2025 — Time : 11.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) G.D Vol-IV — Time : 12.00 hrs.

4 Type of Information : Written/ Oral :
தகவல் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாகவே பெறப்பட்டதின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது

5 Place of Occurrence (a) Direction and Distance from PS: தெற்கு சுமார் 5. கி.மீ. தொலைவில்
குற்ற நிகழ்விடம் பற்றி காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரம் எந்தெந்த திசையில்

Beat Number : — (b) Address: நிலையான் அலுவலகம், தீர்ப்பு வாக்குமை.
ரோந்து எண் : முகவரி: கிழ்ப்பாக்கம் ஹை ரோடு கோடம்பாக்கம், சென்னை

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
காவல் நிலைய எல்லைக்கப்பால் குற்ற இடமெனில், குற்றவிடம் அந்த காவல் நிலைய விவரம்

6 Complainant/ Informant (a) Name: Thiru S. அற்புதம்
புகார்தாரர்/ தகவல் தருபவர் பெயர்

(b) Father's/ Husband's Name :
தந்தை / கணவர் பெயர் R. ராஜேந்திரன்

(c) Date / Year of Birth : 42/1983
நாள் / பிறந்த ஆண்டு

(d) Nationality : இந்தியன்
நாட்டினம்

(e) Passport No. : —
கடவுச்சீட்டு எண்

Date of Issue : —
வழங்கப்பட்ட நாள்

Place of Issue : —
வழங்கப்பட்ட இடம்

(f) Occupation: சிறப்பு துப்பாக்கி தொழில்
தொழில் துணைப்பாதுகாப்பு முன்னாள் இந்திய தூதரக அதிகாரி

7 Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / துப்புக்கெடுத்த / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுவிவரம் விவரத்தாள்
தேவைப்பின் தனித்தாள் இணைக்கவும்

1) திரு. S. திலீபன், முன்னாள் மாவட்ட ஆட்சியர், தீர்ப்பு வாக்குமை மாவட்டம், மாநகர், சென்னை.

2) திரு. M. சுந்தரம், முன்னாள் தலைமைச் செயலாளர், தமிழ்நாடு அரசு, மாநில அரசு, சென்னை.

8. Reasons for delay in reporting by the complainant / informant: திரு. R. ராஜேந்திரன் அவர்கள் அயல்நாட்டில் இருந்ததால் தாமதம்
குற்றஞ்சாட்டப்பட்டோர் / தகவல் தெரிவிப்பதில் முதற்கட்டத் தகவல் தெரிவிப்பதில் தாமதம் —

— முதல்தகவல் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)
பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

தனிந்தாளில் கணினியின் தட்டச்சு செய்யப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முதலீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ....., காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

16/10/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

16/10/2025

15. Date & Time of despatch to the court: 16.10.2025 13.00 Hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: Tamil மு. ரேகா,
Rank: நிலைக்காவல் தலைமைக் காவலர் / No. .....
இ.த.க. மயிலை, சென்னை.

Attachment to Column 12 of Erode V&AC, Cr.No.08/AC/2025, u/s 8 and 7(a) of the Prevention of Corruption Act, 1988, as amended in 2018

சமர்பிக்கப்படுகிறது:

இன்று 16.10.2025 ஆம் தேதி 11.00 மணிக்கு திருமதி. S.கற்பகம், சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் / தனி வட்டாட்சியர் (முத்திரைகள்), ஈரோடு அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு. அனுப்புநர்: S.கற்பகம், சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் / தனி வட்டாட்சியர் (முத்திரைகள்), ஈரோடு. பெறுநர்: காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, ஈரோடு. அம்மா, 15.10.2025 ம் தேதி புதன்கிழமை, ஈரோடு மாவட்டம், ஈரோடு, கோணவாய்க்கால் என்னும் இடத்தில் அமைந்துள்ள நீர்வளத்துறை, கீழ்பவானி வடிநில கோட்டம் செயற்பொறியாளர் அலுவலகத்தில் வைத்து, நீர்வளத்துறை, காங்கயம் உபகோட்டம், உதவி செயற்பொறியாளர் திரு.சதீஷ்குமார் மற்றும் ஈரோடு கோட்ட எல்லைக்குட்பட்ட கரூர் பரமத்தி பிரிவு உதவி பொறியாளர் திரு.குமரேசன் ஆகியோர் கரூர் பரமத்தி எல்லைக்குட்பட்ட குவாரி உரிமையாளர்களிடம் இருந்து புதிய குவாரி ஆரம்பிப்பதற்கு நீர்வளத்துறையின் கருத்துரு வழங்குவது தொடர்பாக, ஈரோடு, கீழ்பவானி வடிநில கோட்டம் செயற்பொறியாளர் அலுவலகத்தில் வைத்து லஞ்சமாக பணம் பெறுவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில், சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் ஆகிய என் தலைமையில் ஈரோடு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் திருமதி.எம்.ரேகா மற்றும் காவல் குழுவினருடன் மேற்படி செயற்பொறியாளர் அலுவலக வளாகத்தில் மாலை சுமார் 16.20 மணிமுதல் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது அங்கிருந்த SRC புளூ மெட்டல்ஸ் என்ற கல்குவாரி உரிமையாளர் திரு.கந்தசாமி என்பவரிடமிருந்து, நீர்வளத்துறை, காங்கயம் உபகோட்டம், உதவி செயற்பொறியாளர் திரு.சதீஷ்குமார் மற்றும் ஈரோடு கோட்ட எல்லைக்குட்பட்ட கரூர் பரமத்தி பிரிவு உதவி பொறியாளர் திரு.குமரேசன் ஆகியோர்களுக்கு புதிய குவாரி அமைப்பது தொடர்பான கருத்துரு பெற்றுதருவதற்காக லஞ்சமாக கொடுப்பதற்காக வைத்திருக்கக்கூடும் என்ற சந்தேகத்திற்கிடமான தொகையான ரூ.3,50,000/- மற்றும் அந்த தொகை வைக்கப்பட்டிருந்த ஹேண்ட் பேக் ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அந்த அலுவலகத்தில் இருந்த திரு.குமரேசன், உதவி பொறியாளர், நீர்வளத்துறை, பாசனபிரிவு, பரமத்தி, கரூர் என்பவரிடமிருந்து ரூ.9,000/- மற்றும் திரு.திருநாவுக்கரசு, முதுநிலை வரைதொழில் அலுவலர் அவர்களிடமிருந்து ரூ.10,500/- ஆகிய தொகைகளை அவர்கள் வைத்திருந்ததற்கான சரியான முகாந்திரம் தெரிவிக்காத காரணத்தினால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.கந்தசாமி அவர்கள் வழங்கிய அவரது குவாரி தொழிலாளர்களுக்கு கூலி வழங்குவது

தொடர்பான பட்டியல் பற்றி கேட்டபோது தனது செல்போனில் இருந்து உள்நுழைவு செய்து பிரின்ட் எடுத்த இரண்டு தாள்கள் கொண்ட பட்டியலின் சான்றொப்பமிட்ட நகல் மற்றும் அவருடன் இருந்த திரு.ஹரிகிருஷ்ணன் என்பவரிடமிருந்து கரூர் மாவட்டம், புவியியல் மற்றும் கனிம்வளத்துறை துணை இயக்குநர் அலுவலக கடிதம் ந.க.எண் 138/கனிமம்/2025, நாள் 08.10.2025 என்ற, நீர்வளத்துறை செயற்பொறியாளரின் கருத்துரு கோருதல் தொடர்பான கடிதத்தின் சான்றொப்பமிட்ட நகல் ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் ஆய்வு 15.10.2025-ம் தேதியில் மாலை சுமார் 16.20 மணிமுதல் இரவு 22.00 மணி வரை நடைபெற்றது. இது சம்மந்தமாக எனது நடவடிக்கைகள் நாள் 15.10.2025 ன்படியான நடவடிக்கை குறிப்பு அந்த அலுவலகத்திலேயே தயார் செய்யப்பட்டது. மேலும், இந்த திடீர் ஆய்வில் தயார் செய்யப்பட்ட நடவடிக்கை, கைப்பற்றப்பட்ட மொத்த தொகை ரூ.3,69,500/-, பணம் வைக்கப்பட்டிருந்த ஹேன்ட்பேக், கூலி வழங்குவது தொடர்பான சான்றொப்பம் செய்யப்பட்ட பட்டியல் மற்றும் புவியியல் மற்றும் கனிம்வளத்துறை துணை இயக்குநர் அலுவலக கடிதம் ந.க.எண் 138/கனிமம்/2025, நாள் 08.10.2025 என்ற கடிதத்தின் சான்றொப்பம் செய்யப்பட்ட நகல் ஆகியவற்றை இத்துடன் இணைத்து ஒப்படைக்கிறேன். எனவே, மேற்படி திரு. S.குமரேசன், உதவி பொறியாளர், நீர்வளத்துறை, பாசனபிரிவு, பரமத்தி, கரூர் மாவட்டம் மற்றும் கார்வழி நீர்த்தேக்கத்திற்கு 1500 மீட்டர் தொலைவில் உள்ள தனது புதியதாக அமைவுள்ள குவாரிக்கு பணம் கொடுத்து கருத்துரு பெற வந்திருந்த SRC புளு மெட்டல்ஸ் என்ற கல் குவாரி உரிமையாளர் திரு.கந்தசாமி த/பெ முனியப்பகவுண்டர் ஆகியோர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (sd xxxxx) (S.கற்பகம்) இடம்: ஈரோடு. நாள் : 16.10.2025 இணைப்பு: சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள் நாள் 15.10.2025, தொகை ரூ.3,69,500/, பணம் வைக்கப்பட்டிருந்த SUPREME WIRE NETTING INDUSTRY மற்றும் முகவரி விபரங்கள் பொறிக்கப்பட்டிருந்த Your Choice என்று பொறிக்கப்பட்டிருந்த கருப்பு நிற ஹெல்மெட் பேக்-1, கூலி வழங்குவது தொடர்பான சான்றொப்பம் செய்யப்பட்ட பட்டியல் 2 தாள்கள் மற்றும் புவியியல் மற்றும் கனிம்வளத்துறை துணை இயக்குநர் அலுவலக கடிதம் ந.க.எண் 138/கனிமம்/2025, நாள் 08.10.2025 என்ற 2 பக்கங்கள் கொண்ட சான்றொப்பம் செய்யப்பட்ட நகல்.

Madam,

Received the complaint on 16.10.2025 at 11.00 hrs, after getting oral permission from the DVAC, Chennai, I am registering a case in Erode Vigilance and Anti-Corruption Crime No.08/AC/2025, u/s 8 and 7(a) of the Prevention of Corruption Act, 1988, as

amended in 2018 on 16.10.2025 at 12.00 hrs (sd xxxxx). 16.10.2025 (M.Rekha) Inspector of Police, Vigilance and Anti-Corruption, Erode.

Original FIR along with the original typed complaint and surprise check proceedings of Tmt.S.Karpagam, Special Inspection Cell Officer / Special Tahsildar (Stamps), Erode is submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Erode and copy of FIR submitted to Director, Vigilance and Anti-Corruption, Chennai

16.10.25

(M.Rekha)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Erode.